

ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க. அரசை கண்டித்து தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் தலைமையில் நடைபெற்றது. உடன் கலாநிதி வீராசாமி எம்பி, வில்சன் எ.பி., மேயர் பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், தாயகம் கவி, மாதவரம் சுதர்சனம், கே.பி. சங்கர், ஐட்ரீம் ஆர். மூர்த்தி, பரந்தாமன், ஜே.ஜே.எபினேசர், ஜோசப் சாமுவேல், வெற்றியழகன், முன்னாள் அமைச்சர் பூங்கோதை ஆலடி அருணா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ரங்கநாதன், கே.எஸ்.ரவிச்சந்திரன் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.





விருதுநகரில் ஒன்றிய பட்ஜெட்டில் தமிழகத்திற்கு நீதி வழங்காத ஒன்றிய அரசைக் கண்டித்து விருதுநகர் தெற்கு வடக்கு மாவட்டக் கழக சார்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மாநிலங்களவை உறுப்பினர் கிரிராஜன் தலைமையில் விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.சீனிவாசன் ராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். தங்க பாண்டியன் முன்னிலையில் நடைபெற்றது.

ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# பெரம்பலூரில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. - கே.என்.அருண் நேரு எம்.பி. பங்கேற்பு!

பெரம்பலூர், ஜுலை,29 -

கழகத் தலைவர் , தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக் கிணங்க , ஒன்றிய நிதி நிலை அறிக்கையில் மாற்றாந்தாய் போக்குடன் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க ஒன்றிய அரசைக் கண்டித்து, பெரம்பலூர் மாவட்ட தி.மு.க சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் இன்று காலை 10 மணி அளவில் பெரம்பலூர் பழைய பேருந்து நிலையம், காந்தி சிலை அருகில் பெரம்பலூர் மாவட்ட அவைத்தலைவர் அ.நடராஜன் தலைமையில், மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர் வரவேற்புரையில் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கழகத் துணைப் பொதுச்செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ. இராசா.எம்.பி. கே.என். அருண்நேரு.எம்.பி., மாவட்ட பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி னார்கள்.

இதில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரை சாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப. பரமேஷ்குமார், மாநில வர்த்தக அணி துணை அமைப்பாளர் வி.எஸ்.பெரியசாமி, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் குன்னம் சி.இராஜேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சயகோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், ந.ஜெகதீஷ்வரன், எஸ்.அண்ணாதுரை, பட்டுச்செல்வி ராஜேந்திரன், அழகு.நீலமேகம்,

மாவட்ட துணைச் செயலாளர்கள் நூருல் ஹிதா இஸ்மாயில்,சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய கழக செயலாளர்கள் என். கிருஷ்ணமூர்த்தி, எம். ராஜ்குமார், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி. ராஜேந்திரன், ஒன்றிய பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன், மாவட்ட அரசு குற்றவியல் வழக்கறிஞர் ப. செந்தில்நாதன், பெரம்பலூர் நகர் மன்ற தலைவர் அம்பிகா ராஜேந்திரன், பெரம்பலூர் ஒன்றிய பெருந்தலைவர் மீனா அண்ணாதுரை, துணை தலைவர் சாந்தாதேவிகுமார், வேப்பந்தட்டை ஒன்றிய பெருந்தலைவர் க. ராமலிங்கம், துணை தலைவர் எம்.ரெங்கராஜ், வேப்பூர் ஒன்றிய பெருந்தலைவர் பிரபா செல்லப்பிள்ளை,

மாவட்ட ஊராட்சி குழுத் துணை தலைவர் முத்தமிழ்செல்வி மதியழகன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் அருள் செல்வி காட்டுராசா, குரும்பலூர் பேரூர் கழக செயலாளர் மு. வெங்கடேசன், அரும்பாவூர் பேரூர் கழக செயலாளர் ஆர்.ரவிச்சந்திரன், பூலாம்பாடி பேரூர் கழக செயலாளர் செல்வலட்சுமி சேகர், குரும்ப லூர் பேரூராட்சி தலைவர் சங்கீதா ரமேஷ், துணை தலைவர் கீதாதுரைராஜ், அரும்பாவூர் பேரூராட்சி தலைவர் வள்ளியம்மை ரவிச்சந்திரன், துணை தலைவர் சரண்யா குமரன், பூலாம்பாடி பேரூராட்சி தலைவர் பாக்கியலட்சுமி செங்குட்டுவன், துணை தலைவர் செல்வலெட்சுமி சேகர்,

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நகர் மன்ற துணை தலைவர் து.ஆதவன்(எ)ஹரி பாஸ்கர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.ஆர்.சிவசங்கர், அ. அப்துல்கரீம், வ.சுப்ரமணியன், ஆர்.அருண், மா. பிரபாகரன், தொ.மு.ச. மாவட்ட கவுண்சில் பேரவை தலைவர் கே.கே.எம். குமார், தொ.மு.ச. கவுண்சில் பேரவை மாவட்ட செயலாளர் ஆர்.ரெங்கசாமி,

மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர் முத்தரசன், மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் பாரி(எ) அப்துல்பாரூக், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஆர்.வேணு கோபால், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சு.தங்க ராசு,

மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் ஆர். முருகேசன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வெ.கார்மேகம், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், துணை அமைப்பாளர்கள் பா.ரினோ பாஸ்டின், இள. கிருஷ்ணா, மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் அ.கருணாநிதி, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் சி.காட்டுராசா,

மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி.ராசா, மாவட்ட அயலக அணி அமைப்பாளர் அ.ரசூல்அகமது,

மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் வெள்ளுவாடி ரவி, மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வெ.ரமேஷ்,

மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.மணிவாசகம், மாவட்ட பிரதிநிதி எஸ்.அழகுவேல், வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ரா.சிவா, வேப்பந்தட்டை கிழக்கு துணை செயலாளர் வனிதா சுப்ரமணியன், பசும்பலூர் கிளைச் செயலாளர் ஜெயபால் மற்றும் பூலாம்பாடி ஆ. வினோத் உள்ளிட்ட பல ஆயிரம் பேர் கலந்து கொண்டனர்.

மாவட்ட துணைச் செயலாளர் சன்.சம்பத் நன்றியுரையாற்றினார்.

பல கோடி தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பிற்கு - நிதி நிலை அறிக்கையில் எதுவும் இல்லை!

# மாநிலங்களுக்கான உரிமைகளை ஒன்றிய அரசு நேர்மையாக வழங்க வேண்டும்!

## மாநிலங்களவையில் மு.சண்முகம் பேச்சு!



புதுடெல்லி, ஜுலை 29-

மாநிலங்களவையில் நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்தில் கழக உறுப்பினர் மு.சண்முகம் பேசியதாவது:-

2024 - 2025 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு மிக்க நன்றி இந்த நிதிநிலை அறிக்கையை இந்த அவையிலே 7வது முறையாக நிதி அமைச்சர் எங்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்த சகோதரி அவர்கள் தாக்கல் செய்துள்ளார்கள். அவர் தமிழ்நாட்டைச் சார்ந்தவர் என்பதால் என்னவோ தமிழ்நாடு புறக்கணிக்கப்பட் டுள்ளது என்பதை அவரை குறை சொல்வதற்காக அல்ல, தமிழ்நாட்டைப் போன்று எதிர்க்கட்சிகள் ஆளுகின்ற மாநிலங்கள் அனைத்தும்புறக்கணிக்கப் பட்டிருக்கின்றது என்பது மிகவும் கவலைக்குரியதாக இருக்கிறது.

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பாரிலானுங் கெடும்

### பேரிடர் நிதி: வஞ்சனை செய்த ஒன்றிய அரசு!

பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலங்களில் பல்வேறு இயற்கைப் பேரிடர்கள் ஏற்பட்டுள்ளன. அந்தப் பேரிடர்களில் அவர்களைக் காப்பாற்றுவதற்கு அந்தந்த மாநில அரசுகள் உடனடியாக மக்களுக்குத் தேவையான உதவிகள் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு செலவு செய்துள்ளனர். அதன் பின் ஒன்றிய அரசின் குழுக்களும் வருகை தந்து பார்வையிட்டு அதனை பரிந்துரையும் செய்திருக்கின்றனர். ஆனால் பேரிடரினால் செலவு செய்யப்பட்ட பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாயை ஒன்றிய அரசு வழங்காமல் இருப்பது வருந்தத்தக்கதாகும்.

அதேபோல பேரிடர் வருவதற்கு முன்பாகவே வருமுன் காப்போம் என்ற நிலையில் சில மாநிலங்களுக்கு தொகைகளை ஒதுக்கீடு செய்திருப்பது வியப்பளிப்பதாக இருக்கின்றது. இயற்கை பேரிடர் என்பது நமது இந்தியாவைப் பொறுத்தளவில் மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்டும் ஒரு பக்கம் மலைப் பகுதியாகவும் இருப்பதினால் பருவநிலை மாற்றத்தின் சீற்றத்தி னால் அதிகமாக கடற்கரையோரம் உள்ள மாநிலங்கள் வெகுவாக பாதிக்கப்படுகின்றன. இதனை கணக்கில் கொண்டு உடனடியாக ஒதுக்க வேண்டிய தொகைகளை நிதியமைச்சர் கொடுத்து அந்த உதவிகளை செய்திட வேண்டுமென்ற கோரிக்கையை இந்த அவையில் நாங்கள் வைக்கின்றோம்.

### மாபெரும் மாற்றம் செய்த திராவிட மாடல் அரசு!

நிதிஆயோக் அறிக்கையில் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் நகர்ப்புற முன்னேற்றம் என்பது மிகச் சிறப்பாக உள்ளது என்றும் ஊராட்சிகளின் நடவடிக்கைகள், கல்வியில் முன்னேற்றம், பெண்கள் முன்னேற்றம், வறுமை ஒழிப்பு மிக சிறந்ததாக இருக்கிறது என்று சான்று அளித்துள்ளார்கள். அதனையே நான் சுட்டிக்காட்டி இப்படிப்பட்ட ஒரு மாபெரும் மாற்றத்தை செய்திருக்கக் கூடிய திராவிட மாடல் ஆட்சி நடத்துகின்ற எங்களுடைய முதல்வர் தளபதி அவர்கள் உங்களிடம் வேண்டுகின்ற நிதியை, அல்ல கொடுக்க வேண்டிய நிதியை நீங்கள் தொடர்ந்து மூன்றாண்டுகளாக பாரபட்சமாக அணுகி நியாயமாக வழங்கிடுவதில்லை.

### ராமர் பாலத்தை இன்று வரை காணவில்லை!

இன்று வளர்ந்து வரும் நகர மயமாக்கலில் போக்குவரத்து என்பது மிகவும் கடுமையாக பொதுமக்களை பாதித்து வருகின்றது. அதற்காக மெட்ரோ ரயில் திட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றது. சென்னையில் இரண்டாவது மெட்ரோ திட்டத்திற்கு இதுவரை ஒன்றிய அரசு நிதி வழங்கவில்லை. ஆனால் மாநில அரசு தனது பங்கை செலவு செய்து அந்த திட்டத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை தாங்களே அறிவீர்கள். எல்லா வரி வசூலும் உங்கள் கையில் இருக்கும்போது தங்களால் ஆன முயற்சிகளை பெரும் சிரமத்துடன் நல்லாட்சி செய்து வரும் தமிழகத்திற்கு நியாய உணர்வோடு தாங்கள் உரிய நிதியை வழங்க வேண்டாமா? மேற்கு கடற்கரையோர கொங்கன் ரயில்வேயைப் போல் கிழக்குக் கடற்கரையோர ரயில் போக்குவரத்து கொண்டு வர வேண்டும். சேதுசமுத்திர திட்டத்தைக் கொண்டு வரும்பொழுது ராமர் பாலம் பாதிக்கப்படும் என்றீர்கள். இன்று வரை பாலம் காணவில்லை. எனவே, இலங்கை, இந்திய நல்லுறவை வளர்க்க தனுஷ்கோடி - தலைமன்னார் இடையே பாலம் அமைக்க முன்வர வேண்டும்.

### வேலையின்றி தவிக்கும் இளைஞர்கள்!

இந்த நிதிநிலை அறிக்கையில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு என்பது தேடிக் கண்டுபிடித்தாலும் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். அரசு ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற சிவில் சர்வீஸ், குரூப் 1 மற்றும் குரூப் 2 போன்ற உயர் அதிகாரிகளுக்கான தேவையை பூர்த்தி செய்வதில் முனைப்பாக இருந்து வருகின்றது. ஆனால் பல்வேறு நிர்வாகத்தில் குரூப் 4 கடைநிலை ஊழியர்களுடைய லட்சக்கணக்கான பணியிடங்கள் காலியாக இருந்து வருகின்றது. குறிப்பாக ரயில்வேயில் போதுமான ஊழியர்கள் இல்லாத காரணத்தினால் ரயில் இயக்கம் பாதிக்கப்படுகிறது. விபத்துக்கள் ஏற்படுகின்றன. நூற்றுக் கணக்கான மக்கள் மாண்டு போகிறார்கள். ஆனால் அதற்கு விசாரணை செய்வதற்கு மட்டும் மேலதிகாரிகளுக்கு குறைவில்லாமல் இருந்து வருகிறது.

### அரசுப் பணி ஒப்பந்தப் பணியானது!

பேரவைத் தலைவர் அவர்களே இந்தியா சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து அப்பொழுது இருந்த மேலதிகாரிகளுக்கும் அடித்தட்டு ஊழியர்களுக்கான விகிதத்தை சற்று கணக்கெடுத்துப் பாருங்கள். அதிகாரிகளுடைய எண்ணிக்கை கூடியிருக்கின்றது. ஊழியர்களின் எண்ணிக்கை குறைந்து வருகின்றது. அதாவது அந்தக் காலங்களில் ஒரு மாவட்டம் என்பது ஒரு பதினைந்து தாலுகாக்களை கொண்டி ருந்தன. அதற்கு ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி கலெக்டராக இருந்தார். இன்று 2 தாலுகா ஒரு மாவட்டமாக இருக்கின்றது. அதற்கும் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி கலெக்டராக இருக்கின்றார். ஆனால் அவருக்குக் கீழே இருக்கக்கூடிய அடித்தட்டு ஊழியர்களின் பணியிடங்கள் நிரப்பப்படாமல் அந்தப் பணிகள் ஒப்பந்த முறையில் நடைபெறுவது மிகவும் விசித்திரமாக உள்ளது. தொழிலாளர் துறையிலேயே ஒப்பந்த முறையில் பணிகள் நடைபெறுகின்றது என்பது வருந்தக்கூடிய செயலாகும்.

### டாட்டா நிறுவனத்திற்கு தாரை வார்க்கும் மோடி!

பொதுத்துறை நிறுவனங்கள் மிகப் பெரிய சாதனைகளை படைத்து வருகின்றது. குறிப்பாக பி.எஸ்.என்.எல். என்பது இந்தியாவிலேயே ஒரு மாபெரும் பொதுத்துறை நிறுவனமாகும். மனிதனின் உடலில் இருக்கக் கூடிய நரம்புகளைப் போல நாட்டில் உள்ள அனைத்து இடங்களுக்கும் பி.எஸ்.என்.எல். இணைப்புகள் சென்று வருகின்றது. அந்தமான் கடலுக்கடியில் கம்பிகள் இழுப்பதாக இருந்தாலும், இமய மலை உச்சியில் கம்பிகள் கொண்டு செல்வதாக இருந்தாலும், மழை, வெள்ளம், பூகம்பம் வந்தாலும் தொலைத் தொடர்புத் துறையை மீண்டும் இயக்க வேண்டுமென்றால் பி.எஸ்.என். எல். உதவி தேவைப்படுகின்றது. அந்த பி.எஸ்.என். எல். நிறுவனத்திற்கு தனியாருக்கு இந்த அரசால் கொடுக்கின்ற சலுகைகளைக் கூட அரசுக்குச் சொந்தமான பி.எஸ்.என். எல். நிறுவனத்திற்கு வழங்குவதில்லை. நீங்கள் ஊட்டி வளர்க்கின்ற மிகப் பெரிய தனியார் கம்பெனிகள் இன்று கட்டணத்தை உயர்த்தி விட்டனர். அதனால் அனைவரும் பி.எஸ்.என். எல். நிறுவனத்திற்கு திரும்ப ஆரம்பித்து விட்டனர். ஆனால், இந்திய அரசோ சேட்டிலைட் நெட்வொர்க்கை டாடா நிறுவனத்திற்கு கொடுத்து அதன் மூலம் பி.எஸ்.என். எல்.லுடைய கட்டமைப்பை பயன்படுத்துவதாக நடவடிக்கைகள் மேற்கொள்வதாக அறிந்தோம். இது எப்படி இருக்கின்றது என்றால், ஏர் இந்தியாவிற்கு போட்டியாக பல்வேறு தனியார் விமானங்களை ஊக்குவித்து ஏர் இந்தியாவை சாகடித்து இப்போது அனைத்தையும் டாடா கையில் ஒப்படைத்தது போல பி.எஸ். என்.எல்.ஐயும் கைவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவது வருந்தத்தக்கது.

### 8 ஆண்டுகளாக ஊதிய உயர்வு இல்லை!

இந்த பி.எஸ்.என்.எல் ஊழியர்களுக்கு கடந்த 8 ஆண்டுகளாக ஊதிய உயர்வு அளிக்காமல் இருப்பதும் கண்டனத்திற்குரியதாகும். இதே போல் பல்வேறு பொதுத்துறை நிறுவனங்கள், பல்வேறு சாதனைகளைப் படைத்திருந்தாலும் இவ்வளவு துன்பங்களுக்கி டையே அவர்கள் படைக்கின்ற சாதனையை தன்னுடைய சாதனையாக பாரதப் பிரதமர் மார் தட்டிக் கொள்கிறார். ஆனால் அந்த பொதுத்துறை நிறுவனங்களை வாழ வழிவிடாமல் செய்து வருகின்றார்கள்.

தொழிலாளர்கள் விரும்புகின்ற பழைய ஓய்வூதியத் திட்டத்தை நேரடியாகநிறைவேற்றுவோம் என்று சொல்வதற்குப் பதிலாக மாற்றுவழியில் கருத்துக்களை கூறுவது சரியாக இருக்காது. புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வுதிய திட்டத்தை அமலுக்குக் கொண்டு வருவது அரசினுடைய கடமை என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். ஈ.பி.எப். பென்சன் திட்டத்தில் உள்ள லட்சக்கணக்கான தொழிலாளர்கள் தங்களுடைய ஓய்வூதியத்தை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கையை பல ஆண்டுகளாக வைத்து வருகின்றனர். ஆனால் அந்த தொழிலாளர்கள் சேர்த்து வைத்திருக்கின்ற பணத்திற்கான உரிய வரவு - செலவு கணக்குகளை இந்த இ.பி.எப். அலுவலகம் தெரிவிப்பதில்லை. 1972 ஆம் ஆண்டு குடும்ப ஓய்வூதிய திட்டத்திற்கான பங்குத் தொகையை 1995ஆம் ஆண்டு ஓய்வூதிய திட்டத்தில் இணைத்திருப்பதாக கூறப்பட்டது. ஆனால் எவ்வளவு அது என்பது இதுவரை தெரிவிக்கப்படவில்லை. 1995லிருந்து இன்று வரை ஓய்வூதிய திட்டத்தின் மூலம் பயனடைந்தவர்கள் எத்தனை பேர் மறைவு எய்தியுள்ளார்கள். அவர்களுடைய மூலதனம் (Corpus Fund) என்னவாயிற்று. மேலும் இந்த இ.பி.எப். திட்டம் தொடங்கிய நாள் முதல் கொண்டு 1952 லிருந்து 2014 வரை தொழிலாளர்கள் ஒரு நிறுவனத்திலிருந்து இன்னொரு நிறுவனத்திற்கு மாறும்போது புதிய கணக்குகளை தொடங்கி பழைய நிறுவனத்தில் பணியாற்றிய பங்குத் தொகையை பெறுவதற்கு வழி தெரியாமல் அவ்வாறு உரிமை கோராத Unclaimed பல லட்சம் கோடி உள்ளது. அதைப் பற்றியும் இன்று வரை இபிஎப் நிறுவனம் யாருக்கும் தெரியப்படுத்துவதில்லை. தொழிலாளர்கள் வேர்வை சிந்தி அவர்களுடைய சேமிப்பை பாதுகாப்பதற்காக இ.பி.எப். நிறுவனத்தில் செலுத்துகிறார்கள். அந்த நிறுவனம் அந்த தொழிலாளர்களுக்கு நியாயத்தை வழங்காமல் அவர்களே ஒரு முதலாளிகள் போல் தொழிலாளர்களை இழுத்தடிப்பது கண்டிக்கத்தக்கதாகும். எனவே, இந்த நிதியினுடைய ஆதாரத்தையெல்லாம் கணக்கில் கொண்டு அவர்களுடைய பென்சன் உயர்வை நிதித்துறை ஆய்வு செய்து அவர்களுக்கு நியாயம் வழங்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

### தொழிலாளர்களின் உரிமையைப் பறிக்கும் ஒன்றிய அரசு!

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு வழங்க வேண்டிய ரூபாய் 1300 கோடி இ.பி.எப். பாக்கியை நீங்கள் வழங்காமல் இழுத்தடிப்பது நல்லதல்ல. உடனே அதனை வழங்க வேண்டும். தொழிலாளர்களின் உரிமைகளைப் பறிக்கும் நான்கு சட்டத் தொகுப்புகளை திரும்பப் பெற வேண்டும். உடனடியாக இந்திய தொழிலாளர் மாநாட்டை கூட்டி தொழிலாளர்கள் பிரச்சினை களை விவாதிக்க வேண்டும்.

பல கோடி தொழிலாளர்கள் அமைப்புசாரா தொழிலாளர்களாக உள்ளனர். அவர்களுக்கு சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்கு இந்த நிதி நிலை அறிக்கையில் எதுவும் கூறப்படவில்லை என்பது வருந்தத்தக்கதாக உள்ளது.

### எந்தப் பலனும் இல்லாத பல்லிளித்த பட்ஜெட்!

விவசாயிகளுக்கான குறைந்தபட்ச ஆதார விலையை சுவாமிநாதன் கமிட்டியின் படி வழங்குவதற்கு எந்தவித உத்தரவாதமும் இந்த நிதிநிலை அறிக்கையில் கூறப்படவில்லை. சிறு தொழில் முனைவோர், வியாபாரிகள் போன்ற அடித்தட்டு மக்களுக்கு எந்த பலனும் இல்லை. தாங்கள் கூட்டணி வைத்துள்ளவர்களுக்கு விசுவாசத்தை காட்டக் கூடியதாக உள்ள அறிக்கையாக உள்ளதை திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் நாங்கள் எதிர்ப்பதோடு, எங்கள் தலைவர் அவர்கள் கூறியதைப் போல, மாநிலங்களுக்கு உள்ள உரிமையை நேர்மையாக அவர்களிடம் வழங்க வேண்டுமென கேட்டு என் உரையை முடிக்கின்றேன்.

இவ்வாறு மு.சண்முகம் பேசினார்.